**பெலிஅத்த பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெலிஅத்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பெலிஅத்த பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமெனை நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டின் போது உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தவணைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,444,660 தொகை நடைமுறைப் பொறுப்புக்கள் என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படாமல் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் என காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்கள் சரியாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த மூலதனச் செலவுகள் ரூபா 3,256,933 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 1,083,843 தொகைக்கான மூலதனச் செலவுகள் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆண்டின் போது மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் கழிவு நீரை சுத்திகரிக்கும் முறைமையை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக ரூபா 1,427,579 இற்கான கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அடுத்த ஆண்டிற்காக அந்த நிர்மாண வேலையை தொடர்வேலை ஆக்குவதில்லை என குறிப்பிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அதே பெறுமதியினால் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஒதுக்கங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2013 ஆண்டின் போது சபையின் முன் அலுவலகம் நிர்மாணிப்பதற்காக தென் மாகாண முதலமைச்சில் இருந்து பெற வேண்டிய ரூபா 2,018,000 தொகைக்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செலவிடப்பட்ட செலவு ரூபா 1,724,411 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 293,589 தொகை மிகையாக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சபை தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன்பட்டோர் ஒதுக்கங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கிடைத்த நிலையான வைப்பு வட்டி ரூபா 127,726 தொகை பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டியை புதுப்பிக்கும் அறிவித்தல் வங்கியில் இருந்து கிடைத்த பின்னர் வருமானத்திற்கு எடுக்கப்படும் என. | பெற்ற வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 102,342 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 70,892,458 தொகைக்கான 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகள்/ துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 1,023,072 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 340,041,978 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படும் எனவும் மற்றும் பல வருட காலமாக காணப்படும் அந்த மீதிகளுக்கான விபரங்கள் கண்டறிய முடியாதுள்ளது என. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,544,548 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,882,988 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i. | பெற வேண்டிய வீதவரி ரூபா 1,181,695 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2007 ஆம் ஆண்டின் ஆதன பெறுமதி மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டிலும் வீதவரி அறவிடப்படுவதனால் பெறுமதி மதிப்பீடு நாளதுவரை ஆக்கப்படாமல் இருந்த காலம் 08 ஆண்டுகள் ஆகும். | கொரோனா தொற்றுநோய் காரணமாக வரி அறவீடு செய்ய முடியாமல் போனது எனவும் எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வருட ஆரம்பத்தில் கிடைத்திருந்த புதிய பெறுமதி மதிப்பீட்டினை அங்கீகாரத்திற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவும் அங்கீகாரம் கிடைத்த பின்னர் செயற்படுத்துகின்றேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு காலரீதியாக செயற்படுத்தப்பட வேண்டும். |
| ii. | பெற வேண்டிய வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 77,600 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அந்த நிலுவை மீதியில் முன்னைய ஆண்டிற்கான மீதி ரூபா 81,800 தொகை ஆகும். | ரூபா 31,800 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது எனவும் மீதியான மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| i. | பெற வேண்டிய கடை வாடகை ரூபா 1,064,364 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்படும். |
| ii. | சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 766,091 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| iii. | சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய வாடகை ரூபா 1,143,139 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதித் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கும் மற்றும் பொது அலுவல்களுக்காக கிடைக்க வேண்டிய தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| iv. | உள்ளூராட்சி ஆணையாளரின்(தெற்கு) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் படி தற்காலிக பெறுமதி மதிப்பொன்றின் மீது கடை வாடகை அறவீடு செய்யாமல் 23 கடை அறைகளுக்காக 2007 மற்றும் 2012 ஆண்டுகளின் போது எடுக்கப்பட்ட சபைத் தீர்மானங்களின் மீது கடை வாடகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் 04 ஆம் பந்தியின் படி 04 கடைகளில் இருந்து ரூபா 438,000 இற்கான ஒரே முறையில் செலுத்தும் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>மேலும் 05 ஆம் பந்தியின் படி 07 கடை அறைகளின் உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட்டு இருக்காததுடன் காலவீச்சு 01 வருடம் மற்றும் 16 வருடங்கள் இடையே காணப்பட்டது. | 23 கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், நிலுவை ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்கும், உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்படாமல் காணப்பட்ட கடையறைகளின் வாடகையாளர்களுக்கு இறுதி அறிவித்தல் வழங்கியுள்ளேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங் முறையே ரூபா 261,514 தொகை மற்றும் ரூபா 40,191,592 தொகையாக இருந்தது. | நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் புதிய வீதி விளக்குகள் பொருத்தும் போது மின்சார சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 1948 வீத விளக்கு அலகுகளுக்காக அவ்வாறு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டு வீதி விளக்கு பராமரிப்புக்காக ரூபா 1,874,744 தொகை செலவிடப்பட்டு அவற்றில் மீளளிப்புச் செய்யக் கூடிய தொகை ரூபா 114,060 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 1,760,684 தொகை அறவீடு செய்ய முடியாத செலவொன்றாக காணப்பட்டது. | பொது மக்கள் நலனோம்புக்காக வீதி விளக்குகள் பொருத்தப்பட்டது எனவும் செலவுகளை மீளளிப்புச் செய்யும் படி இலங்கை மின்சார சபையிடம் விண்ணப்பித்துள்ளேன். | செலவுகளை மீளளிப்பு செய்வதற்காக மற்றும் புதிய வீதி விளக்குகளுக்காக அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் முன்னைய ஆண்டுகளின் போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூவரிடம் பெற வேண்டிய ரூபா 519,632 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் வழக்குத் தாக்கல் செய்தல் தொடர்பான விபரங்களும் சபையில் காணப்படவில்லை. | இந்த ஆட்கள் தொடர்பான தகவல்களை பெற்றுத் தரும்படி தங்கல்ல நீதிவான் நீதிமன்றத்திற்கு கடிதம் ஒன்று சமர்ப்பித்துள்ளேன். | பெற வேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆண்டின் போது ரூபா 202,400 தொகை செலவிடப்பட்டு 2018 திசெம்பர் 31 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை செயற்திட்டத்தின் கழிவுநீர் சுத்திகரிக்கும் முறைமையை அபிவிருத்தி செய்யும் செய்பணிக்காக மீளாய்வாண்டு இறுதி அளவிலும் எதிர்பார்த்த விளைவினை பெற்றிருக்காததுடன் அந்த நிர்மாண வேலைக்காக பயன்படுத்தப்பட்ட கம்பிகள் நியமத்திற்கு புறம்பாக காணப்பட்டமையால் செயற்திட்டம் செயற்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்தது. | நியமத்துடனான கம்பிகள் பயன்படுத்தப்பட்டு உடன்பட்ட சங்கத்தினால் மீண்டும் நிர்மாண வேலை மேற்கொள்ளப்படாமையால் அந்தச் சங்கத்திற்கு பணம் ஏதும் சபையினால் செலுத்தப்படவில்லை எனவும் செயற்திட்டத்திற்குரிய ஏற்பாடுகள் தொடர்வேலை ஆக்கப்படமாட்டாது என குறிப்பிடப்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் பதிவேடுகளில் இருந்து அகற்றுகின்றேன். | உடன்படிக்கை மற்றும் மதிப்பீடுகளின் படி செயற்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |